பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 23 ஞாயிற்றுக்கிழமை (08-11-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 346

# பல கட்சிப் பிரதிநிதிகளின் குழு கூட்டாக வடக்கே வர முயற்சி!

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண கொழும்பில் புதிய ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவம்பர் 8

பிரதான எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளையும் அரச தரப்புப் பிரதிநிதிகளையும் கொண்ட குழு ஒன்று கூட்டாக யாழ். வருவதற்கான முன்முயற்சிகள் கொழும்பில் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக் கின்றன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான மற்றோர் முன் நடவடிக்கையாக இது அமையும் என்றும் கொழும்பில் தகவல் வெளி யிடப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பிரதிநிதிகள் விரைவில் யாழ்ப்பாணத்துக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர் சிலர் தெரிவுக் குழுவின் தலைவரான மங்கள முனசிங்கவை வற்புறுத்தியிருக்கின்றனர் என்றும்—

இது பற்றிய செய்தியை சுதந்திரக்கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'லங்காதீப' பிரசுரித்திருந்தது என்பதும் தெரிந்ததே.

பல கட்சிப் பிரதிநிதிகள் குழுவை யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லும் நடவடிக்கைக்கான முன்முயற்சியில் கொழும்பில் ஒரு சாரார் தற்போது ஈடுபட்டிருப்பதாக அறிய வருகிறது.

அவர்கள் இந்த முன்முயற்சிக்கான ஏற்பாடுகள் குறித்து கொழும்பில் தற்போது தங்கியிருக்கும் யாழ். அரச அதிபரிடம் பிரஸ்தாபிக்கக் கூடும்

(3ஆம் பக்கம் பார்க்க)

## காமினி ஜெயசூரியவின் யோசனை புலிகளுக்கு!

### மதகுருமார் எடுத்து வருவர்

கொழும்பு, நவ. 8

யாழ்ப்பாணம் செல்வதற்கு உத்தேசித்துள்ள மதகுருமார் தூதுக்குழு, சிங்களவர் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் திரு. காமினி ஜெயசூரியாவின் யோசனைகளையும் எடுத்துச் செல்லும்.

தமது சொந்த யோசனைகளுடன், காமினி ஜெயசூரியாவின் யோசனைகளையும் விடுதலைப் புலிகள் தலைவர்களிடம் சமர்ப்பித்துக் கலந்தாலோசனை செய்வர் என்றும் "லங்காதீப" செய்தி வெளியிட்டுள்ளது.

மதகுருமார் எப்படியும் இம் மாதத்தில் யாழ்ப்பாணம் செல்வர் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதகுருமார் குழு யாழ்ப்பாணம் புறப்பட முன்னர் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து அவர்களது ஆலோசனைகளையும் ஆசியையும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## 'கந்துல' கப்பல் மூழ்கியதற்கு சதிச் செயல்தான் காரணம்?

கொழும்பு, நவ. 8

புத்தளம் கடற்பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையின் "கந்துல" என்ற கப்பல் மூழ்கிய சம்பவம் சதிச் செயலாக இருக்கலாம்.

—இவ்வாறு பாதுகாப்புத் துறைச் செய்தியாளர் ஒருவர் சந்தேகம் வெளியிட்டிருக்கிறார். இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த மாதம் 8 ஆம் திகதி பல கோடி ரூபா பெறுமதியான "கந்துல" கடற்படைக் கப்பல் கடலில் மூழ்கிய சம்பவம் தொடர்பாக எழுப்பப்படும் பல கேள்விகளுக்கு விடை காணமுடியாமல் இருக்கிறது.

"கந்துல" கடலில் மூழ்கியமைக்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும்—

கந்துலவுக்குப் பயன்படுத்தப்பட்ட எரிபொருளில் கலப்படம் செய்யப்பட்டிருந்தது (Contaminated) என்பதே பிரதான காரணமாகச் சொல்லப்பட்டது.

கடற்படைக்கு எரிபொருள் வழங்கப்படுவதற்கு முன்னர் அந்த எரிபொருள் பழுதாகியிருந்தது என்று கூறமுடியாது. ஏனென்றால் அதே எரிபொருளைத்தான் "சூரயா" என்ற கடற்படைக் கப்பலும் மற்றைய கடற்படைக் கப்பல்களும் பயன்படுத்துகின்றன.

எனவே கடற்படையினரின் கைக்கு எரிபொருள் வழங்கப்பட்ட பின்னர் அதில் சிலவேளை தண்ணீரை ஊற்றுவதன் மூலம் கடற்படைக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் "எக்ஸ்ரே" வசதி முற்றாகத் தடைப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை 'எக்ஸ்றே' பிரிவு ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இதனால் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நோயாளிகளுக்குக் கூட "எக்ஸ்றே" படப்பிடிப்பை மேற்கொள்ள முடியாத அவல நிலை தோன்றியுள்ளது.

வெள்ளிக்கிழமை நண்பகலோடு, பல தொடர்பான 'எக்ஸ்றே' பட வசதி தவிர, ஏனைய சகல 'எக்ஸ்றே' வசதிகளும் தடைப்பட்டன. போதனா வைத்தியசாலையின் "எக்ஸ்றே" பிரிவில் மொத்தம் நான்கு இயந்திரங்கள் இயங்கி வந்தன. வைத்தியசாலையில் நிலவும் மின் பற்றாக்குறைவால் இரண்டு இயந்திரங்கள் கடந்த சில மாதங்களாக இயங்கவில்லை.

எஞ்சிய இரண்டு இயந்திரங்களில் ஒன்று சிறுபிள்ளைகளை 'எக்ஸ்றே' படம் பிடிக்கப் பயன்பட்டது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் அதன் முக்கிய மின்குமிழ் ஒன்று பழுதடைந்ததால் அதுவும் செயல் இழந்துவிட்டது.

... மின்குமிழை கொழும்பில் மட்டுமே ... பிலிருந்து தருவிக்க யாழ். வைத்தியசாலை நிர்வாகத்தினர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. குறிப்பிட்ட மின்குமிழை யாழ்ப்பாணம் எடுத்துவர கட்டுப்பாடு அனுமதி வழங்க மறுத்து விட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் ஊரடங்கு

கொழும்பு, நவ. 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று காலை 5 மணி முதல் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக கூட்டுப் படைத் தலைமையகம் நேற்று மாலை அறிவித்தது.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கான காரணம் ஏதும் தெரியவரவில்லை.

(உ-5)

### பிரேமாவுக்கு அழைப்பு

கொழும்பு, நவ. 8

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஏழாவது 'சார்க்' மாநாட்டில் பங்குபற்றுவதற்கு வருகை தருமாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

பங்களாதேஷ் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் நேற்று கொழும்பில் ஸ்ரீலங்கா ஜனாதிபதியை நேரில் சந்தித்த இந்த அழைப்பைக் கையளித்தார்.

சார்க் அமைப்பின் தலைவராக இருக்கும் ஜனாதிபதி பிரேமதாஸா டாக்கா மாநாட்டின் போது தலைமைப் பதவியை உத்தியோகபூர்வமாக பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியாவிடம் கையளிப்பார். (உ)

### தபால்களை சேர்க்க அவகாசம்

கிளிநொச்சி, நவ. 8

வெளியூர் தபால்களை நாளை காலை 7-30 மணிக்கு முன்பதாக யாழ். பிரதம தபாலகத்தின் உள்ளேயும் வெளியேயும் உள்ள தபால் பெட்டிகளில் சேர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

இத்தபால்கள் 'குமண' கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

(உ-162)

### வங்கக் கடலில் தாழ்வு மண்டலம்

சென்னை, நவ. 8

வங்கக் கடலின் மேற்கு மத்திய பகுதியில் மீண்டும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஒன்று உருவாகியதை அடுத்து தமிழ் நாடு — ஆந்திர மாநிலங்களின் கரையோரப் பகுதிகளில் பலத்தமழை பெய்து வருகிறது.

நேற்று முன்தினம் தமிழ் நாட்டின் நாகர் கோவிலில் மட்டும் 112 மில்லி மீற்றர் மழை பெய்ததாகவும்—

அடுத்த 48 மணி நேரம் மழை தொடர்ந்து பெய்யும் என்றும் நேற்று மாலை அறிவிக்கப்பட்டது. (இ)

### மண்டைதீவிலிருந்து துப்பாக்கி வேட்டுகள்

குருநகர், நவ. 8

மண்டைதீவு ஸ்ரீலங்கா படையின் காவலரண்களில் இருந்து நேற்றுக் காலை 8-30 மணியளவில் யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

(உ-51-162)

### மீட்பு நிதி

யாழ்ப்பாணம், நவ. 8

கரவெட்டி, பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு, சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நாளை திங்கட்கிழமை தமிழீழ மீட்புநிதி சேகரிக்கப் படவுள்ளது.

கரவெட்டி பிரிவில் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை நெல்லியடி மகா வித்தியாலயத்திலும்—

பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு பிரிவுகளில் 10 30 மணி தொடக்கம் 11 30 மணி வரை வல்வை மகளிர் கல்லூரியிலும், 12 மணி முதல் 1 மணி வரை வட இந்து மகளிர் கல்லூரியிலும்—

(4ஆம் பக்கம் பார்க்க)

### சிங்களவர் இயக்கமும் நிராகரிப்பு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்க வெளியிட்ட யோசனையை —

முன்னாள் அமைச்சரான காமினி ஜெயசூரியவின் தலைமையில் இயங்கும் சிங்கள ஆரக்ஷ சம்விதானயவும் (சிங்களவர் பாதுகாப்பு இயக்கமும்) நிராகரித்திருக்கிறது.

இந்த யோசனையை தமிழ்க் குழுக்களும் நிராகரித்துவிட்டன என்பது தெரிந்ததே.

### தனியார் பஸ் மீது ஏறாவூரில் கல்வீச்சு!

கொழும்பு, நவ. 8

பொலனறுவையிலிருந்து ஏறாவூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றின் மீது செங்கலடியில் வைத்து இனந்தெரியாத குழு ஒன்று கல்வீச்சு நடத்தியதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இந்தக் கல்வீச்சினால் அந்தத் தனியார் பஸ்ஸின் சாரதியும் பஸ்ஸில் பயணம் செய்த பயணி ஒருவரும் படுகாயம் அடைந்தனர். இருவரும் பின்னர் ஏறாவூர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

### மற்றுமொரு குழந்தை பலி!

யாழ்ப்பாணம், நவ. 8

வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த மற்றுமொரு குழந்தை நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானது.

இக்குழந்தையுடன் சேர்த்து கடந்த 7 நாட்களில் யாழ். ஆஸ்பத்திரியில் மட்டும் பத்துக் குழந்தைகள் வயிற்றோட்ட நோயினால் உயிரிழந்திருக்கின்றன.

நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் இந்நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்ட 10 குழந்தைகளுடன் சேர்த்து 66 குழந்தைகள் இந்நோய் காரணமாக கடந்த 7 நாட்களில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன. (உ-15)

மரத்தை நாட்டிட
மழையது பொழியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பெரிய, சிறிய ஆங்கில கதைப் புத்தகங்களும் ரீடேர்ஸ்டைஜஸ்ட் (Readers-Digest) புத்தகங்களும் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் உடன் பெற்றுக் கொள்ளலாம். (8 ஆம் திகதி காலை 8 மணி — மாலை 6 மணி வரை) இல. 120, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (23176)

### மணப்பெண் தேவை

நல்ல ஒழுக்கமுள்ள, 30 வயது B. Sc. ஆசிரியருக்கு படித்த, அழகான பெண் தேவை. நட்சத்திரம்: மகம், 12 இல் செவ்வாய். புகைப் படத்துடன் தொடர்பு கொள்ளவும்: G. குணரத்தினம் 169, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (23169)

U K. எலெக்ரோனிக் எஞ்ஜினியர், 31 வயது, 8 இல் செவ்வாய், மூலம். பாகம் 21 உடைய மணமகனுக்கு ஆகுள்ள அல்லது இருக்கின்ற மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (23160)

யாழ் இந்து 28 வயது, 8 இல் செவ்வாய் 6' 1'', Norway இல் M Sc Engineering படித்து வேலை செய்பவருக்கு அழகான, படித்த, உயரமான செவ்வாய்க்குற்றமுள்ள Norway க்குப் போக விரும்பும் மணப்பெண் தேவை. முழு விபரங்களோடு விண்ணப்பிக்கவும். இல: 460, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (23152)

### மணமக்கள் தேவையா

உங்கள் மணப்பிரச்சினையை அலைச்சல் இன்றி இலேசாகத் தீர்க்கலாம். சந்திப்பு சனி காலை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (23158)

### மணமகன் தேவை

30 வயது பூசம் 2 ஆம் பாதம், A/L படித்து கொழும்பில் வேலை பார்க்கும் மணமகளுக்கு வெளிநாட்டு, உள்நாட்டு எஞ்ஜினியர், டாக்டர், எக்கவுண்டன் மணமகன் தேவை. செ. விஜயரத்தினம், ''லக்ஷ்மி திருமண சேவை'', நவாலி கிழக்கு, மானிப்பாய். (22977)

### துர்க்கா திருமண சேவை

31-08 1992 தொடக்கம் துர்க்கா திருமண சேவை சிவசக்தி ஸ்ரோர்ஸ், இல. 194, நாவலர் றோட், யாழ்ப்பாணம். சகலருக்கும் மேற்கூறிய முகவரிக்கு திங்கள், புதன், சனி தொடர்பு கொள்ளவும். (5547)

### இலவச திருமண சேவை

43 வயது. திருவோணம், உதயச் செவ்வாய், படித்த, 10 ஏக்கர் காணி, டிராக்டர் உரிமையாளருக்கு மணப்பெண் தேவை. தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (5551)

### O/L மாணவர்களுக்கு

கடந்த நான்கு வருட பரீட்சையின் எல்லாவித வினா-விடை மலிவு விலையில் விற்பனையாகின்றது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்திக்கு அருகாமை, யாழ்ப்பாணம். (ஸி-3769)

### ஆண்டு 5 புலமைப் பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்கான இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582, Stanley Road, Jaffna. (ஸி-3755)

### A/L இரசாயனம்

மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சண்டிலிப்பாய் சுற்றாடல் பகுதியில் தனிப்பட்ட முறையில் அல்லது சிறு குழுக்களாக 93, 94 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு அனுபவம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியரால் நேரில் வந்து கற்பிக்கப்படும். விவரங்களுக்கு 05, மே/பா உதயன் சேவை நிலையம், இல. 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (5421)

### ஆண்டு - 6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு - 6 அனுமதிக்கான மாதிரிப் பரீட்சைகள் 01-11-1992, 03-11-1992, 05-11-1992, 07-11-1992, 08-11-1992, 10 - 11 - 1992, 12-11-1992 ஆகிய தினங்களில் பி.ப. 3-30 மணிக்கு நடத்தப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸி-3752)

பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 01-11-92 முதல் 13-11-92 வரை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Book - Stall 582, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸி-3753)

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம்/ றோ. க/ கிறிஸ்தவம்), வர்த்தகம் விவசாயம், மனைப்பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582, Stanley Road, Jaffna. (ஸி-3754)

### நேரம் பெறுமதியானது

சீருடையோ வேறுடையோ துரித சலவைக்கு மில்க்வைற் சவர்க்காரம் அழுக்கை அகற்றவும், அதிக வெண்மைக்கும் மில்க்வைற் சவர்க்காரம். 50 கிறாம் பக்கற் ரூபா 6/- மட்டுமே. எல்லாக் கடைகளிலும் கிடைக்கிறது. 100 மேலுறைகளைக் கொடுத்து அழகிய கைலேஞ்சியை அன்பளிப்பாகப் பெறுங்கள். மில்க்வைற். (ஸி-3663)

### SPOKEN ENGLISH

3 மாதப் பயிற்சி கிழமையில் இரண்டு நாட்கள் ஆங்கிலத்தில் பேசப் பயிற்றப்படுகிறது. English Grammar With Spoken English and Literature V.N. Kandasamy (A.I.B.) Part-I (London) Inter (London) இல. 87, திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (23177)

### கோழிமுட்டை

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (23151)

### வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள்பார்வையுடன் கூடிய சைவநெறி, தரம் மீட்டலுக்கான வினா-விடை ஆண்டு 11. ஆக்கம்: க. சந்திரசேகரம், வெளியீடு: சோதி வெளியீட்டு காரியம்; எல்லாப்புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (ஸி-3668)

### உடன் விற்பனைக்கு

கறுப்பு + பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொகையாக பெற்றுக் கொள்பவர்களுக்கு விசேட கழிவுண்டு. மல்லிகா பதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (5557)

Prima+Bahira+Hy-Line+Christombu (பிறிமா + பகிரா + கைலைன் + கிறிஸ்தம்பு) ஆகிய இன பேட்டுக் குஞ்சுகள் மற்றும் புறொய்லர் குஞ்சுகளுக்கு தொடர்பு கொள்ளவும். (5558)

### கல்வி

G. C. E (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும், 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல: 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (23172)

## இசைப்பிரியர்களுக்கு ஓர் நற்செய்தி

இந்தியாவிலேயே மிக அண்மையில் வெளியான புதிய திரைப்படப் பாடல் இசைத்தட்டுகள் யாவும் எம்மிடம் வந்தடைந்துள்ளன. நீங்கள் விரும்பிய புதிய, பழைய ஹிந்தி, ஆங்கில மற்றும் பழைய பாடல்களையும் ஸ்டீரியோ முறையில் இசைத் தட்டுகள் மூலம் பதிவு செய்து கொள்ள!

நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:

**ஸ்கைறோஸ் ஒலிப்பதிவுக் கூடம்**

இல. 1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (23173)

## பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனம்

**Patrician Institutes**

அகில உலக கெயர் மரவேலை, கட்டுவேலை பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் ஸ்தாபனத்துடன் (Care-International) இணைந்து எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சித் தகைமை:
15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்.
8 ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட்டோரும்.

கொடுப்பனவு:
ஸ்தாபனப் பயிற்சியின் போது (2½ மாதம்) மாதம் 600/-வும் பயிலுனர் பயிற்சியின்போது (10 மாதம்) வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள்: **13 - 11 - 1992** க்குப் பிந்தாமல்

பதிவாளர்:
பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனம்,
இல. 59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்

என்ற முகவரியில் கிடைக்கப்பெறல் வேண்டும். (ஸி-3680)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L PAPER CLASS** நடைபெறுகின்றன

★ புதிய அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன,

**கல்வி ஆண்டு - 1993**

**ஆண்டு: 6, 7, 8, 9, 10 O/L**

திறமையால் பிரபல்யமான திறமை மிக்க யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
05 - 12 - 1992

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும். (ஸி-3771)

## வைத்திய சேவை

Dr. க. அம்பியபாகன் M. B. B. S. (Ceylon) தனது வைத்திய சேவையை, சம்பந்தன் டிஸ்பென்சரியில் நடத்துகிறார்.

இடம்: சம்பந்தன் டிஸ்பென்சரி,
574/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கிக்கு அருகில்)

நேரம்; ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8-00 மணி தொடக்கம் 12 00 மணி வரை. (23161)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
17 — 05 — 1956



மறைவு:
22 — 10 — 1991

அமரர்
**சாமிநாதன் மகேந்திரராஜன் (M.Sc)**
(கடற்றொழில் ஆலோசகர் (நீர்வாழ் உயிரியல்))

திதி: 08 — 11 — 1992

அன்பின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
அறிவின் நிறைகுடமாய்
அடக்கத்தின் வடிவமாய்;

தாய்க்குத் தலைமகனாய்
தரணியில் வந்துதித்தாய்
உற்றாரை நேசித்தாய்
உறவினரை மகிழ்வித்தாய்.

மனத்தின் கண் மாசிலாது
மனச்சாட்சியே தெய்வம் என்றாய்
பற்றற்ற துறவி போல
விருப்பு வெறுப்பு அற்று நின்றாய்.

உள்ளிருந்தே நோயொன்று
உன்னை வருத்திய போதிலும்,
கடல் கடந்து சென்று,
கல்வி கற்று பட்டங்கள் பல பெற்றாய்

பெற்ற கல்விக்கேற்ப
பேர் புகழோடு விளங்கினாய்
இறுதி மூச்சுவரை,
உறுதியோடு உழைத்தாய்;

உன் அன்பு முகம் காணாமல்
ஆண்டு ஒன்றாக ஏங்குகிறோம்
மீண்டும் எங்கள் குடும்பத்தில்
ஒளி விளக்கேற்ற வருவாய் ஐயா!

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,
தந்தை, தாய்,
சகோதர, சகோதரிகள்.
உறவினர்கள், நண்பர்கள்.

''கிருஷ்ணவாசா''
தாவடி வீதி,
மானிப்பாய். (5531)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வீம்புக்கு வேட்டை!

அரசாங்க மற்றும் உள்ளூராட்சி ஊழியர்களுக்கு முப்பது சதவீதம் சம்பள உயர்வு வழங்கும் அறிவிப்புடன் இம்முறை வரவு - செலவுத் திட்ட யோசனைகள் கலகலப்படைந்துள்ளன. எப்போதும் இல்லாதவாறு 30 சத வீத சம்பள உயர்வை வழங்கித் தமது வரவு-செலவுத் திட்ட யோசனைகளை நிதிஅமைச்சர் மின்னச் செய்திருக்கிறார்:

இந்த வெளி மினுக்கத்தினால் நாட்டின் பொருளாதாரம் ஆரோக்கியமுள்ளதாக, வலுவானதாகக் காட்டப்பட்டிருக்கிறது. அரசின் ஏனைய குறைபாடுகளையும், பல வீனங்களையும் உட்பூசி மறைத்து, தென்னிலங்கை மக்களுக்கு அரசாங்கத்தின் மீதுள்ள அதிருப்தியை மறந்துவிடச் செய்வதற்கு நிதிஅமைச்சர் பெரிதும் முயன்றிருக்கிறார்!

தென்னிலங்கை மக்களில் ஆகக் கூடியது 20 சத வீதத்தினர் மட்டுமே அரசாங்க மற்றும் உள்ளூராட்சி ஊழியர்கள். மிகுதியானோர் சுயதொழில் செய்பவர்கள் அல்லது தனியார்துறை ஊழியரானவர். அரசாங்க உத்தியோகத்தர்களின் பணப்பையில் அதிகம் சேர்வதால் எல்லோரது கஷ்டமும் நீங்கிவிடும் என்பதல்ல.

பொருள்களின் விலைகள் ஏற்கனவே வானத்து முகட்டைக் கிழித்துக் கொண்டு மேலே போய்விட்டன. இனியும் உயராது என்பதற்கு உத்தரவாதம் எதுவுமே இல்லை. எனவே சாதாரண மக்கள் உழைக்கும் மக்களின் கஷ்டங்கள் பட்டினி, ஏழ்மை நிலை என்பன தொடரப்போகின்றன.

ஏப்பிரல் மாதத்தில் நடக்கவிருக்கும் மாகாண சபைத் தேர்தலைக் கருதி நகரப்புற மக்களின் வாக்குகளை வாங்குவதற்காகவும் முப்பது சத வித சம்பள உயர்வு முலாம் பூசப்பட்டிருக்கலாம்!

நாட்டின் மொத்தச் செலவினங்களில் பாதுகாப்புச் செலவினம் முப்பது சத வீதம் என்பதால் பொருள்களின் விலைகளைக் குறைக்க முடியவில்லை. வடக்கு - கிழக்கில் யுத்தத்தைத் தொடர்வதால் தெற்கிலே அபிவிருத்தி வேலைகளைச் செய்யவோ, வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கவோ, விலைவாசிகளைக் குறைக்கவோ முடியாத இக்கட்டான நிலை அரசுக்கு.

பாதுகாப்புக்கு 1,800 கோடி ரூபாவைச் செலவிட்டும் போரில் வெல்ல முடியவில்லை வருடாந்த வரவு — செலவில் 6,600 கோடி ரூபா துண்டு விழும் நாட்டில் சுளையாக 1,800 கோடி பாதுகாப்புச் செலவுக்குப் போனால் நாடும், மக்களும் எப்படித் தாங்கிக் கொள்வது?

இந்தச் "சூக்ஷ்மங்"கள் எதுவும் தெரியாமல் பூசி மினுக்கவே அரச ஊழியருக்கு 30 வீத சம்பள உயர்வு!

அபிவிருத்தி வளங்கள் மக்களுக்கு முழுமையாகக் கிடைப்பதற்கு வடக்கு- கிழக்கு நிலை தடையாக உள்ளது. சமாதானம் நிலைநாட்டப்பட்டால் ஆகக் குறைந்தது 1,200 கோடி ரூபாவை உடனடியாக வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும் என்று பிரதமரே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

தமிழருக்கு எதிரான போரை நடத்தி அரசாங்கம் வீம்புக்கு வேட்டை ஆடுகிறது என்பதனை இதிலிருந்து எவரும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும்!

வடக்கு — கிழக்கில் சமாதானம் நிலைநாட்டப்பட்டால் அபிவிருத்தி வளங்களை மக்களுக்குக் கிடைக்கச் செய்யலாம் என்று கூறும் நிதி அமைச்சர் விஜேதுங்கவே — பாதுகாப்புத் துணைஅமைச்சராக நின்று, அடுத்த மாதம் முடிவதற்குள் யுத்தத்தை முடிக்க வேண்டும் என்று ஆயுதப் படையினருக்குக் கால அவகாசமும் வழங்கியிருக்கிறார்!

ஒவ்வொரு அமைச்சருக்கான முகமூடியைப் போடும் போது அதற்கு ஏற்ற விதத்தில் பேசுகிறாரோ! இவ்வாறு அமைச்சரும் அரசாங்கமும் நீண்ட காலத்துக்கு முகமூடிகளை மாற்றிக்கொண்டிருக்க முடியாது! தென்னிலங்கை மக்களே அவற்றைக் கிழித்தெறியும் காலம் வரும்!

# குடாநாட்டு அகதிக் குடும்பங்களுக்கு கிளிநொச்சியில் இருப்பிட வசதிகள்

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக குடாநாட்டிலிருந்து கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்த அகதிகளுக்கு தற்காலிக கொட்டில்களை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது;

குடாநாட்டைச் சேர்ந்த அகதிகளில் தற்போது கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிளிநொச்சி கரடிப்போக்கு பெருந்த விளாவரம் கட்டடத்தில் 40 குடும்பங்களும் —

இராமநாதபுரத்தில் 21 குடும்பங்களும் —

கிருஸ்ணபுரம் நலன்புரிச் சங்கத்தில் 15 குடும்பங்களும் —

அக்கராயன்குளம் நலன்புரிச்சங்கத்தில் 102 குடும்பங்களும் தங்கி உள்ளன.

தற்போது இவர்களுக்கான முழு நிவாரணமும் கடந்த மாதம் முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இவர்களுக்கு கொட்டில்களை அமைத்துக் கொடுக்கத் தேவையான நிதி விவரம் அரசாங்க அதிபர் திரு. பொன்னம்பலத்தின் கவனத்துக்கு கரைச்சி உதவி அரச அதிபரினால் கொண்டுவரப்பட்டுள்ளது;

அத்துடன் இந்த அகதிகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை ஒக்ஸ்பாம் நிறுவனமும், கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கமும் செய்து கொடுத்துள்ளன.

குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகளில் ஒரு தொகுதியினர் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள நாச்சிக்குடாவிலும் தங்கி உள்ளனர். (இ-97)

# சமாதானத் தீர்வை எட்ட அரசு உறுதி பூண்டுள்ளது

## பிரதமர் விஜேதுங்க வலியுறுத்து

கொழும்பு, நவ. 8

ஐக்கிய இலங்கைக்குள் சமாதானத் தீர்வொன்றை எட்ட, விரைவில் அரசியல் உடன்பாடு காண அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது

பிரதமர் டி. பி. விஜேதுங்க தனது வரவு செலவுத்திட்ட உரையின் போது இவ்வாறு தெரிவித்தார்;

வடக்கு - கிழக்கில் இடம் பெறும் யுத்தம் காரணமாக அபிவிருத்திக்குச் செலவிடப்படும் பெருந்தொகைப் பணத்தின் பயனை அனுபவிக்க முடியாதுள்ளது.

சமாதானம் ஏற்படுமானால் வருடாந்தம் ஆயிரத்து 200 கோடி ரூபா மீதமாகும்.

சமாதானத்துடன் வெளிநாட்டு முதலீட்டு மட்டங்களும் உயரும்: இதனால் வேலை வாய்ப்புப் பெருக்கமும், தொழில் நுட்ப மாற்றமும் ஏற்படும் —

இவ்வாறு பிரதமர் மேலும் சொன்னார். [த]

# மாணவர்களைக் குழப்ப ஜே. வி. பியினர் முயற்சி

## ஜனாதிபதி எச்சரிக்கிறார்

மாணவர் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தி பாடசாலைகளை மூடவைக்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதில் ஜே. வி. பி. உட்பட வேறு சில அக்கறையுள்ள சக்திகள் ஈடுபட்டுள்ளன.

ஜனாதிபதி பிரேமதாஸா அனுராதபுரத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்;

"இச்சக்திகள் வதந்திகளைப் பரப்பும் இயக்கம் ஒன்றையும் நடத்தி வருகின்றன. பாடசாலை அபிவிருத்திச் சபை என்ற பெயரில் பாடசாலைகளை தனியாரிடம் கையளிக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதாக இச்சக்திகள் குற்றஞ் சாட்டி வருகின்றன, அரசின் இந்த முயற்சியை மாணவர்கள் எதிர்க்க வேண்டும் என்று இச் சக்திகள் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்து வருகின்றன;" — என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்;

இப்பிரசார இயக்கத்தில் பின்னால் பிரதானமாக ஜே. வி. பியினர் செயற்படுகின்றனர் என்று கூறிய ஜனாதிபதி, மக்களால் நிராகரிக்கப்பட்ட சில அரசியல்வாதிகளும், சில 'டியூட்டறி' முதலாளிமார்களும் இச் சக்திகளை ஆதரிப்பதாகவும் குற்றஞ் சாட்டினார். [இ-எ]

### நாளை

பண்டத்தரிப்பு சுன்னாகம் கோட்டத்தில் சைவாசிரியர் கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெறும்; இக்கூட்டத்தில் பாடசாலைகளில் இருந்து மாணவர் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர். [வ]

★ ★ ★

சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவை ஒட்டி யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே பேச்சுப் போட்டி ஒன்றை நடத்தவிருக்கிறது. பிரண்டாம் பேச்சுப் போட்டி நாளை திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

★ ★ ★

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கைதடி நவீண்டி பாடசாலை மைதானத்தில் நடைபெற உள்ளது. யாழ்ப்பாணம் லியோ கழகத்தினரின் ஆதரவில் இந்த விளையாட்டுப் போட்டி நடத்தப்படுகிறது.

இவ் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளும் சிறுவர்கள் அனைவருக்கும் பாடசாலை உபகரணங்களும், உடுபுடவைகளும் வழங்கப்படும்.

# கிளிநொச்சியில் கோழி வளர்ப்புத் திட்டம் வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 8

கிளிநொச்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கழகம் அறிமுகப்படுத்திய கோழி வளர்ப்புத் திட்டம் வெற்றி அளித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பகுதியிலுள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட சுமார் 71 குடும்பங்களுக்கு ஆயிரத்து 420 கோழிக்குஞ்சுகள் அண்மையில் வழங்கப்பட்டன. இவை தற்போது நல்ல பயனைத் தருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வழங்கப்பட்ட கோழிகள் இன விருத்தியின் பின் மீளப் பெறப்பட்டு, தெரிவு செய்யப்படும் கிராமம் ஒன்றுக்கு வழங்கப்படும். [த]

# ஆசிக்குளம் அகதி முகாமுக்கு செஞ்சிலுவை உதவி வழங்கும்

கொழும்பு, நவ [8

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பும் அகதிகளை தங்க வைப்பதற்கென வவுனியா ஆசிக்குளத்தில் அமைக்கப்பட இருக்கும் பாரிய முகாமுக்கு தேவையான மருத்துவ வசதிகளை அளிக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் முன்வந்துள்ளது.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு பகுதிகளில் வாழும் மக்களின் நிலைமைகளையும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய வசதிகளையும் ஆராய்வதற்காக இங்கு வந்த மேற்படி குழுவின் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர். [த]

# அடக்குமுறையினால் தமிழ்மக்களின் கல்வி வளர்ச்சியை தடுக்க முடியாது

## அச்சுவேலி மகா வித்தியாலய நூற்றாண்டுவிழாவில் உரை

அச்சுவேலி, நவ 8

"அடக்கு முறைச் சக்திகளினால் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சியை தடுத்து விட முடியாது. நாம் இரண்டாம் தரப் பிரஜைகள் அல்லர்; எத்தகைய இழப்புகள் வந்தாலும் கல்வியில் மனம் தளரக் கூடாது; வீரம் - தன்மானம் - அஞ்சா நெஞ்சம் உள்ளவர்களாக மாணவர்கள் துணிந்து நின்று கல்வியில் முன்னேற வேண்டும்;

இவ்வாறு கூறினார் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம்.

அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் [illegible] பர் திரு. [illegible] தலைமையில் [illegible] அரங்கில் நடைபெற்றது.

விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கல்விப் பணிப்பாளர் மேலும் பேசுகையில் கல்வியினால் மாணவர்களின் உள்ளத்தில் ஒளி ஏற்பட வேண்டும். மன உறுதியும் தனது பிரதேசத்தையும் மக்களையும் மறக்காத நிலையும் ஏற்பட வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைகளை நகரப் பாடசாலைகளை நோக்கித் தள்ளாமல் தமது சுற்றாடலில் உள்ள பாடசாலைகளில் கல்வி புகட்ட முன்வர வேண்டும். தமது பிரதேசத்தின் கல்விக் கூடங்களை உயர்த்துவதற்கு உழைக்க வேண்டும்." என் [illegible] முன்னேற்றத்துக்கு [illegible]

இல் தலைவர் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

விழா ஆரம்பத்தில் கல்விப் பணிப்பாளர் மற்றும் முன்னாள் அதிபர்கள் பண் நிலையத்தில் இருந்து மங்கள வாத்தியம் சகிதம் அழைத்து வரப்பட்டனர்.

முன்னாள் அதிபர்களின் நினைவாக 'சிங்காரத்தினம் மண்டபம்", "துரைசிங்கம் மண்டபம்" ஆகியவை திறந்து வைக்கப்பட்டன;

நூற்றாண்டு விழா நினைவு மண்டபம் நிறுவுவதற்கான நிதியை கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் வழங்கி நிதிசேகரிக்கும் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். [இ-11]

# உதைபந்தாட்ட பயிற்சியாளர் ரி. பி. காலமானார்

யாழ்ப்பாணத்தின் பிரபல உதைபந்தாட்டப் பயிற்சியாளர்களுள் ஒருவரான ரி. பி. பத்மநாதன் நேற்று முன்தினம் காலமானார் அவருக்கு (வயது 58) அவரின் இறுதிக்கிரியைகள் நேற்று தாவடியில் நடைபெற்றன.

மகாஜனாக் கல்லூரியில் கடமையாற்றிய இவர், அக்கல்லூரியின் உதைபந்தாட்ட அணிகளை தேசிய தரம் எட்டக்கூடிய அளவுக்கு உயர்த்த உழைத்தவர். இவரின் திறமையான பயிற்சியின் கீழ் அக்கல்லூரியின் முதலாம் பிரிவு அணி 1974 ஆம் ஆண்டு வரை எட்டு வருட காலம் தொடர்ந்து யாழ். மாவட்ட பாடசாலைகளின் சாம்பியனாகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலைக்கழக உதைபந்தாட்டப் பயிற்சியாளராக அவர் பணி புரிந்தபோது, இவ்வருடம் ஸ்ரீலங்கா பல்கலைக்கழக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். அணி சாம்பியனாகி தங்கப் பதக்கத்தை வென்றது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாவின் பழைய மாணவரான இவர் சிறந்த கிரிக்கெட், ஹொக்கி விளையாட்டு வீரருமாவார்.

### ஹெலி நோட்டம்

வலிகாமம் வடக்குப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 5 மணி முதல் சுமார் அரை மணி நேரம் ஹெலிக்கொப்டர் ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டது. (உ-126)

### காமினி ஜெயசூரிய..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெற்றுக்கொள்ளவிருப்பதாகவும் — அச்செய்தி மேலும் தெரிவித்தது.

தூதுக்குழுவினர் யாழ்ப்பாணம் செல்லும்போது அங்குள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கவென அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் என்பவற்றையும் எடுத்துச் செல்வர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பல கட்சிப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்த முயற்சிக்கு பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினதும் —

அக்கட்சிப் பிரமுகரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுத் தலைவருமான திரு. மங்கள முனசிங்கவினதும் முழு ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது; (உ)

### 'கந்துல'...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப்பலைச் செயலிழக்கச் செய்ய முடியும் என்றால் —

அத்தகைய சேவைச் செய்யக்கூடிய வலிமை பெற்ற விடுதலைப் புலிகளிடமிருந்தும் ஏனையோரிடமிருந்தும் கப்பல்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கந்துல கடலில் மூழ்கியதற்கு காலநிலையும் ஓர் அம்சமாக இருக்கும் சாத்தியம் உண்டு. கடல் அலைகள் கப்பலின் முக்கிய உறுப்புகளுக்குள் புகுந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் அதனால் கப்பல் மூழ்கமுடியாது; அத்துடன் அந்த இடத்தில் பிரச்சினை ஏதுமின்றி கந்துலவிலும் பார்க்க மிகச்சிறிய "பி-235 சூரயா" கப்பல் இயங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே கந்துல மூழ்கியதற்கு சதிச் செயலே காரணம் என்பதற்கு பலத்த சாத்தியக் கூறுகள் உள்ளன.

கந்துல மூழ்கியதற்கான காரணங்கள் என்னவாக இருப்பினும், அதனால் நட்டமடைந்திருப்பவர்கள் படையினரும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மக்களும் தான்.

படையினருக்கும் சிவிலியன்களுக்கும் உணவுப் பொருள்களை கடல் மார்க்கமாக வழங்கி வருவதில் 'கந்துல' முக்கிய பங்கு வகித்தது.

கடலில் மூழ்கிய 'கந்துல'வைக் கடற்படையினர் நிச்சயமாக மீட்டு விடுவர். அதனை மீட்டு எடுத்து மீண்டும் கடலில் ஓடவிட பல மாதங்கள் ஆகும். — என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். ஆஸ்பத்திரியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடைசி ''எக்ஸ்றே'' இயந்திரமும் வெள்ளிக்கிழமை நண்பகல் பழுதடைந்து இயங்காது நின்றுவிட்டது. அதனைத் திருத்துவதற்கு உள்ளூர் தொழில்நுட்பவியலாளர்கள் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. பழுதடைந்த ''ரைமர்'' உபகரணத்தைக் கொழும்பில் மட்டுமே பெற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. மாற்று வழியாக குறிப்பிட்ட உபகரணத்தை இங்கேயே தயாரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன]


திருகோணமலை மாவட்ட இடம்பெயர்ந்த கலைஞர்களின் கலை வளர்ச்சிக்காக

# காணி நிலம் வேண்டும்

(நாடகம்)

(திருமலை மாவட்ட இடம்பெயர்ந்த கலைஞர்கள்)

# களத்தில் காத்தான்

(சிந்துநடைக் கூத்து)

(விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில்)

காலம்: 08-11-1992 பி.ப. 3.30 மணி

இடம் : கைலாசபதி கலை அரங்கு, யாழ். பல்கலைக் கழகம்

அன்பளிப்பு 50/-, 25/-, 15/-

(அனுமதிச் சீட்டுகள் மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்).

(உங்கள் ஆதரவிற்கு நன்றி)

திருமலை மாவட்ட இடம்பெயர்ந்த கலைஞர்கள்.

(23183)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

# முழு நிலா அறிவியல் அரங்கு

காலம்:- 09 — 11 — 1992 திங்கள்

நேரம்:- மாலை 3-00 மணி

இடம்: குமாரசுவாமி மண்டபம்.

மாலை:- 3-00 — 3-30 மணி

''சர்வதேச அரசியல் விவகாரங்களில் புவிசார் அரசியலின் முக்கியத்துவம்''

திரு. பாலச்சந்திரன் (தலைவர், புவியியற்துறை - யாழ். பல்கலைக்கழகம்.)

மாலை:- 3-30 — 4-30 மணி

''தமிழ் மக்களின் இடப் பெயர்வும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும்.''

திரு. கார்த்திகேசு குகபாலன், (சிரேஷ்ட - விரிவுரையாளர், புவியியற்துறை யாழ். பல்கலைக்கழகம் )

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன். செயலாளர்.

யாழ். இ. க. ப. மா. ச.

(கி/3681)


# நன்றி நவிலல்

## Dr. ஆறுமுகம் துரைச்சாமி

(Retired R. M. P.)

எமது அன்புத் தலைவர் 24 - 10 - 1992இல் கண்டியில் காலமானபோதும், 26 - 10 - 1992இல் நடைபெற்ற ஈமக்கிரியைகளிலும் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், கடிதமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி, ஒத்தாசை வழங்கியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மகன், மகள், மருமக்கள்.

தகவல்:
Dr. கலா சிவயோகநாதன்; (மகள்)

இல. 80, அனிவத்த றோட், கண்டி.

(5482)

# கண்ணீர் அஞ்சலி

## T. P.பத்மநாதன்

யாழ் பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளர் திரு T P பத்மநாதன் அவர்கள் 06 - 11 - 1992 இரவு காலமாகிவிட்டார் என்பதை ஆழ்ந்த மனவருத்தத்துடன், அறியத்தருகின்றோம். பல்கலைக்கழக அணியின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அயராது உழைத்தவர்க்கு, நாம் கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம். குறிப்பாக யாழ் பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியை, அகில இலங்கை பல்கலைக்கழக போட்டியில் தங்கப்பதக்கம் வென்று, சாதனை புரிய முன்னின்று உழைத்த, அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம். துயருறும் அவரது குடும்பத்தவர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதைபந்தாட்ட அணியினர், யாழ். பல்கலைக்கழகம்.

(23190)

# இன்று

உடுவில், நவ 8

கொழும்பு, விவேகானந்த சபையினரால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் சைவ சமயபாட பரீட்சை இன்று நடைபெறும்.

★ ★ ★

யாழ். சைவபரிபாலன சபை நடத்தும் சைவசமய பரீட்சைகள் இன்று நடைபெறுகின்றன. (த-152-30)

★ ★ ★

பாலர் கல்விக்கழகத்தின் 26 ஆவது ஆண்டு பெற்றோர் தின விழாவும், கலைநிகழ்ச்சிகளும் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று நடைபெற உள்ளன. பதினாறு பாலர் பாடசாலைகள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றன. பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்ச்சிகளில் யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நடேசபிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ச)

★ ★ ★

பேராசிரியர் த. சத்தியதாசன் எழுதிய ''பகவான் சத்யசாயிபாபா நாம் — கடவுள்'' எனும் நூல் வெளியீட்டு விழா உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க பிரேமானந்த நிலையத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும். (ச-3)

★ ★ ★

அமரர் வைத்திய கலாநிதி ஜே. சி. பிலிப்ஸின் பெயரில் ஞாபகார்த்த சபை ஒன்று நிறுவப்படவுள்ளது இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு புனித சம்பத்திரிசியார் தொழில்நுட்ப நிறுவன மண்டபத்தில் நடைபெறும். (ச)

## பல்கலைக்கழக ஊழியர் தினவிழா

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் தினவிழா எதிர்வரும் புதன்கிழமை பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும். பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவும், சிறப்பு விருந்தினராக பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரனும் கலந்து கொள்வர்.

காலையில் ஊழியர்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகளும், மாலையில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. (ச)

## மருத்துவபீட மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட அனைத்து மாணவர்களுக்குமான கூட்டம் ஒன்று மருத்துவபீடத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி. ப. 4.30 மணிக்கு நடைபெற உள்ளது.

மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரஸ்தாப கூட்டத்தில் முக்கிய விடயங்கள் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மீட்புநிதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சாவகச்சேரி, பசிலைப் பள்ளி ஆகிய பிரிவுகளில் பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும், பிற்பகல் 3.30 மணி முதல் 4.30 மணி வரை மட்டுவில் சரஸ்வதி மகாவித்தியாலயத்திலும், பிற்பகல் 4.45 மணி முதல் 5.30 மணி வரை நாவற்குழி மகாவித்தியாலயத்திலும்— வைத்து மீட்பு நிதி சேகரிக்கப்படும். (இ-5)


விலங்கியல்

R. N. ஈஸ்வரதாசன் B. Sc (Cey.)

93 A/L, 94 A/L

புதிய பிரிவுகள் இன்று ஆரம்பம்

நேர அட்டவணை நிறுவனத்தில்

சயன்ஸ் சென்ரர்

எழிலகம் முன்ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(இ/3778)


## "உதயன்" ஆதரவில்

# சதுரங்கப் போட்டிகள் சாவகச்சேரியில் நாளை

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். கல்வித் திணைக்களம் ''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். பாடசாலை மாணவரிடையே நடத்தி வரும் சதுரங்கச் சுற்றுப் போட்டியில் சாவகச்சேரி கோட்ட மாணவர்களுக்கான போட்டிகள் நாளை இடம் பெறவிருக்கின்றன.

நாளை காலை 8 30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இந்தப் போட்டிகள் நடைபெறும்.

யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, மருதனார்மடம் கல்விக் கோட்ட மட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்குபற்றியது தெரிந்ததே.

வடமராட்சி கோட்ட மாணவர்களுக்கான போட்டிகள் குறித்தும், ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான இறுதி நிலைப் போட்டிகள் பற்றியும் பின்னர் அறிவிக்கப்படும் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## உற்சவம்

அராலி, நவ. 8

அராலி தெற்கு தறணன் முகமூர்த்தி கோயில் வருடாந்த அலங்கார உற்சவ பூர்த்தி இன்று காலை சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (த-12)

## ஸ்ரீலங்காவுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, நவ. 8

சர்வதேச போதைப் பொருள் கடத்தல் காரர்களான 16 பேர் ஸ்ரீலங்காவுக்குள் புகுந்திருப்பதாக இன்டர் போல் (சர்வதேச பொலிஸ்) ஸ்ரீலங்கா அதிகாரிகளுக்கு எச்சரிக்கைச் செய்தி அனுப்பியிருக்கிறது.

இத்தாலி, ஸ்பெயின், இந்தியா, கொலம்பியா, போர்த்துக்கல் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே இவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-10)

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா பூபாலராஜசிங்கம்

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த (இளைப்பாறிய ஆசிரியர், மட்டுவில் மகாவித்தியாலயம்) தம்பையா பூபாலராஜசிங்கம் 06-11-92 இல் கனடாவில் காலமானார்.

இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், சிவபூஷணம், சிவராசா, சிவசோதி, சிவகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினம், சுதர்ஷினி, கிருஷ்ணகுமார், பாஸ்கரன் ஆகியோரின் மாமனாரும், கிருஷ்ணகாந்தா, ஜனார்த்தனன், சஜன், தர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று சனிக்கிழமை (07-11-92) கனடாவில் நடைபெற்றது.

தகவல்:
திருமதி சிவபூஷணம் இரத்தினம்

கல்வயல் வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

(23182)

## சண்முகம் சுப்பிரமணியம்

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உரும்பராய் மேற்கை வதிவிடமாகக் கொண்டவரும் பலாங்கொடை பெட்டியகல தோட்ட முன்னாள் அதிகாரியும் (Field officer) ஆகிய ச. சுப்பிரமணியம் அவர்கள் சனிக்கிழமை காலமானார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், மனோகரபூபன் (Managing Partner - Manoharan and Vettivel). மோகனா, மகேந்திரராஜா (Accountant Sri Krishna Corporation Colombo) ஆகியோரின் தந்தையும், கருணாதேவி, சுந்தரமூர்த்தி (Velliampati - Vink -, Alaveddy), அமுதா (Accountant - Jinasena Group) ஆகியோரின் மாமனாரும், வீணா (திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கில பாடசாலை), கிருஷ்ணவேணி (கண்டிக்குளி மகளிர் கல்லூரி), மோகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிறு 08- 11- 1992 இன்று காலை அன்னை இல்லம், மானிப்பாய் வீதி, உரும்பராய் மேற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10 மணிக்கு கோம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

– கி. கி. மனோகரபூபன்.

49, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

(23180)

## அகமது மம்மு [பீடி மாஸ்டர்]

இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சில்லாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான அகமது மம்மு 7- 11- 92 காலமாகிவிட்டார். அன்னார் மேரி மாகிறெற்றின் (ராணி) அன்புக் கணவரும், றொபேட் ஷாஜி (இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி, ஆண்டு 11) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மரியதாஸ், மரியமலர், அன்ரன் (ஜேர்மனி), றொன்சன் (சுவிஸ்), வின்சன் (சுவிஸ்), கிறேசியன் (சுவிஸ்), றஞ்சன் (இந்தியா), செல்வதி (ஜேர்மனி), மலர் ஆகியோரின் மைத்துனரும், கிருபராஜா, தேவி (கனடா), தர்மினி (ஜேர்மனி), கிட்டா ஆகியோரின் சகோதரனும், யக்கோமுத்து, பெர்னடெத் ஆகியோரின் மருமகனும், றாஜி, அருள், ஷயாம், ஆகியோரின் பெரியப்பாவும், சுஜி, விஜி கிமன், றொஷா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக உயரப்புலம் ஆனைக்கோட்டை அடைக்கலமாதா கோயில் அருகாமையில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து சில்லாலை சேமக்காலைக்கு 8- 11- 92 இன்று காலை 9 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
மம்மு ஷாஜி
(மகன்)

(23193)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org